**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர்.**

**முன்னிலை : திரு.ஆர்.புவனேஷ்குமார் B.A., L.L.B (Hons), L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**கடலூர்.**

2026– ம் ஆண்டு ஏப்ரல் 29–ஆம் நாள்

திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் சித்திரை 16–ம் நாள்

CNR. No. **TNCD06-000088-2017**

ஆண்டுபட்டிகை **வழக்கு எண்.8/2017**

காவல் உதவி ஆய்வாளர்

கடலூர் புதுநகர் காவல் நிலையம்

குற்ற எண். 377/2016 ....குற்றமுறையிடுபவர்

.. எதிர் ..

1) விக்னேஷ் த.பெ முருகையன்

2) விகரம் த.பெ ராஜா

3) பன்னீர்செல்வம் த.பெ முருகையன்

4) மதன் த.பெ ராஜா

5) அரிபிரசாத் த.பெ செந்தில்

6) முக்னேஷ்வர் த.பெ முருகேசன் ....எதிரிகள்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட

**R.O.C.No**. 814/2020/**RG/F**1 (**P.Dis.No**. 36/2021) உத்தரவு மற்றும் **Rule** 106 **Cr.R.P.**–ன்படி

## CASE SUMMARY

| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Bail |
|---|---|---|---|
| | A-1,3,6-**14.07.2016** | | 15.07.2016 |
| | A-2,4,5 | 28.07.2016<br>01.11.2016<br>26.08.2016 | 28.07.2016<br>12.03.2019<br>26.08.2016 |

<table>
<tr><td rowspan="2">ii) Date of filing of the Complaint / Final report in the Court</td><td>Filing of complaint</td><td colspan="2">Filing of Final Report</td></tr>
<tr><td>13.07.2016</td><td colspan="2">05.11.2016</td></tr>
<tr><td>iii) The date of questioning of the Accused U/s.240 of the Code of Criminal Procedure, 1973</td><td colspan="3">28.04.2017</td></tr>
<tr><td rowspan="3">v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the Code</td><td>Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td>U/s. .320 of Cr.P.C</td><td>12.02.2026</td><td>Dismissed</td></tr>
<tr><td>U/s. 311 Cr.P.C</td><td>09.04.2026</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="4">v) Date of examination in-chief and cross-examination of a witness</td><td>Name of the Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>1. திரு.விநாயகமூர்த்தி</td><td>12.02.2026</td><td>12.02.2026</td></tr>
<tr><td>2) திரு.சுப்ரமணியன்</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr>
<tr><td>3) திரு.மோகனகிருஷ்ணன், சிறப்பு உதவி ஆய்வாளர்</td><td>09.04.2026</td><td>09.04.2026</td></tr>
<tr><td>vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C.</td><td colspan="3">29.04.2026</td></tr>
<tr><td>vii) Details of abscondance of an Accused and his appearance / production, as the case may be; and</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>viii) Grant of stay by superior Courts and the results there of:</td><td colspan="3">Nil</td></tr>
</table>

Particulars u/s.106 of Criminal Rules of Practice, 2019 (Form 61)

| | | |
|---|---|---|
| 1 | Name of the police station and crime number of the offence | Cuddalore NT P.S<br>Cr.No: 377/2016 |
| 2 | Description of the accused:<br>Name:<br>Father's name:<br>Occupation:<br>Residence:<br>Age: | 1) Vignesh S/o Murugaiyan<br>2) Vikram S/o Raja<br>3) Panneerselam S/o Murugaiyan<br>4) Madhan S/o Raja<br>5) Ariprasath S/o Senthil<br>6) Mugneshwar S/o Murugesan<br><br>Pagavathiamman Koil Street<br>Vilva Nagar, Cuddalore. |
| 3 | Date of occurrence | 13.07.2016 |
| 4 | Date of Complaint | 13.07.2016 |
| 5 | Date of Apprehension | A-1,3,6 -14.07.2016<br>A-2,5,6 28.07.2016, 01.11.2016<br>26.08.2016 |
| 6 | Date of Release of Bail | A-1,3,6 -15.07.2016<br>A-2,5,6 28.07.2016, 01.11.2016<br>26.08.2016 |
| 7 | Date of Commitment | Not applicable |
| 8 | Date of Commencement of trial | 29.04.2026 |
| 9 | Date of Closure of Trial | 29.04.2026 |
| 10 | Date of Sentence or Order | 29.04.2026 |
| 11 | Date of service of copy of judgment or finding on accused | Not applicable, since acquittal |
| 12 | Explanation of delay | No delay |

இவ்வழக்கானது 25.01.2017ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 29.04.2026 தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.ஜோதிரத்னம் அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பாலமுருகன் M.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடலூர் மஞ்சக்குப்பத்தில் உள்ள புனிதவளனார் கல்லூரியில் படிக்கும் இவ்வழக்கின் சாட்சி 3 பிரபாகரன் இருக்கையின் பக்கத்தில் அதே வகுப்பில் படிக்கும் 1வது எதிரி உட்கார்ந்தபோது, சாட்சி 3, எதிரியை பார்த்து கொஞ்சம் தள்ள உட்கார் என்று சொல்லியதற்கு, எதிரி எப்படி என்னை தள்ளி உட்கார் என்று சொல்லலாம் என்று சொல்லி கையால் அடித்துள்ளார். இதை சாட்சிகள் 1,2 இருவரும் சாட்சி 3 க்கு ஆதரவாக எதிரியை கண்டிதுள்ளார்கள். இதனால் இருவருக்கும் விரோதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 13.07.2016ம் தேதி 13.20 மணிக்கு கடலூர் புனிதவளனார் கல்லூரியின் மெயின்கேட் அருகில் இவ்வழக்கின் சாட்சி 1,2 இருவரும் கல்லூரி முடித்து வீட்டிற்கு செல்வதற்காக வந்துகொண்டு இருந்தபோது, அதே கல்லூரியில் படிக்கும் எதிரிகள் அனைவரும் 1வது எதிரிக்கு ஆதரவாக கையில் உருட்டுகடடை, ஸ்டேம மற்றும் கத்தி ஆகியவற்றுடன் வந்து சாட்சிகளை வழிமறித்து, சாட்சி 1ஐ பார்த்து ஏண்டா தேவிடியா பசங்களா நீங்க என்ன பிரபாகரனுக்கு சப்போட்டா என்று அசிங்கமாக திட்டி, 1வது எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியால் சாட்சி 1னின் இடது கையில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், மற்ற எதிரிகள் அனைவரும் கையில் வைத்திருந்த உருட்டுகட்டை மற்றும் ஸ்டேம் ஆகியவற்றால் சாட்சி 2ன் முதுகு தோள்பட்டை ஆகிய இடங்களில் அடித்தும், சாட்சி 1,2 இருவருக்கும் சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் தன் கையில் வைத்திருந்த ஆயுதத்தை சாட்சிகளிடம் காண்பித்து இனிமேல் எங்களிடம் வீண் பிரச்சனை வைத்துக்கொண்டால் உங்கள் அனைவரையும் இங்கேயே வெட்டி புதைத்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்துள்ளனர் என்று கடலூர் புதுநகர் காவல் ஆய்வாளர் 1 முதல் 6 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 324, மற்றும் 506(ii) கீழ் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3)** வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானர். எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4) குற்றச்சாட்டு :–**

எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரிகளிடம் அவர்கள் மீதான குற்றங்கள் குறித்து வினவியபோது, எதிரிகள் தங்கள் குற்றத்தை மறுத்தார்கள். எதிரிகள் தங்கள் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, 1 முதல் 6 எதிரிகளிடம் இதச பிரிவுகள் 148, 341,294(பி), 324, மற்றும் 506(ii) கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று கூறினார்கள்.

**5)** அரசுத்தரப்பில் 1 முதல் 16 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

வழக்கு விசாரணைக்கு முன் எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 320(2)–ன் படி சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294 (பி) மற்றும் 506(ii)–ன் படியான குற்றங்கள் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**6) அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

அ) **அசா.1/புகார்தாரர் / விநாயகமூர்த்தி** தனது முதன்மை விசாரணை சாட்சியத்தில், கடந்த 13.07.2016 ந் தேதி 01.20 மணியளவில் வீட்டிற்க்குச் செல்வதற்காக கல்லூரி கேட் அருகே வந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தன்னையும் தனது நண்பர் சுப்பரமணியையும் வழிமறித்து அசிங்கமாக திட்டியும், முதுகு

மற்றும் தோள்பட்டையில் உருட்டு கட்டையால் அடித்தும், தனது உள்ளங்கையில் கத்தியால் வெட்டியும், கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், அடிபட்ட எங்களை செந்தில் மற்றும் மோகன் ஆகியோர் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும், போலீசார் விசாரிக்கும் போது புகார் வாக்குமூலம் அளித்ததாகவும், மேற்படி எனது கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அதசாஆ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**ஆ) அசா.2/புகார்தாரர் / சுப்ரமணியன்** தனது முதன்மை சாட்சியத்தில், கடந் 13.07.2016 ம் தேதி 12.00 மணியளவில் வீட்டிற்கு செல்வதற்காக கல்லூரி கேட் அருகே வந்தபோது அடையாளமட் தெரியாத நபர்கள் தன்னையும், தனது நண்பர் விநாயகமூர்த்தியையும் வழிமறித்து அசிங்கமாகதிட்டி, தாக்கி கொலைமிரட்டல் விடுத்தனர் என்றும், அடிப்பட்ட தங்களை செந்தில் மற்றும் மோகன் ஆகியோர் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, புதுநகர் போலிசார் வந்து தன்னை விசாரித்தனர் என்றும், அப்போது எதிரிகள் மீது அசா.1 புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**இ) அசா.3/திரு.மோகனகிருஷ்ணன்,சிறப்பு உதவி ஆய்வாளர் /கூடுதல்சாட்சி** தனது முதன்மை சாட்சியத்தில், தற்போது புதுநகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னுடன் பணிபுரிந்த திரு.கனகராஜ் தலைமை காவலர், திரு.சீனுவாசன் உதவி ஆய்வாளர் மற்றும் திருமதி.தாரகேஸ்வரி உதவி ஆய்வாளர் ஆகியோரின் கையெழுத்து தனக்கு நன்கு பரிச்சயம் என்பதாலும் இவ்வழக்கின் கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 13.07.2016 ம் தேதி திரு. கனகராஜ் தலைமை காவலர் அவர்கள் நிலைய பொருப்பில் இருந்த போது மாலை 15.00 மணிக்கு கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனை சென்று விசாரித்த போது புதுச்சேரியைச் சேர்ந்த வினாயகமூர்த்தி த.பெ ரவி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து அன்றைய தினமே 13.07.2016 ந் தேதி பதிந்த நிலைய குற்ற எண் 377/2016 சட்ட பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 324, 506(2) இதசவாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 பதிந்தார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக திரு.சீனுவாசன் உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட திரு.சீனுவாசன் உதவி ஆய்வாளர் அவர்கள் 13.07.2016 மாலை 15.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு

சாட்சிகள் அருண், ரவீன்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ 3 மற்றும் வரைபடம் அ.சா,ஆ 4 தயாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றும், பின்னர் மற்ற சாட்சிகளான விநாயகமூர்த்தி, சுப்ரமணியன், பிரபாகரன், நேரு, தமிழ், தேவி, செந்தில்குமார், மோகன், ஜெயராஜ் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பெற்றார் என்றும், இவ்வழக்கின் விசாரணை அதிகாரி திரு. சீனுவாசன் உதவி ஆய்வாளர் அவர்கள் இடமாறுதல் பெற்று சென்றதால் இவ்வழக்கின் கோப்புகள் மேல் விசாரனைக்கு திருமதி. தாரகேஸ்வரி உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம் பெற்ற அ.சா 1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் டாக்டர் ஜெபிகா அவர்களை 05.11.2016 அன்று விசாரித்து வாக்குமூலம் பெற்றார் சொற்பகாயம் என்று அவர் வழங்கிய காயச்சான்றிதழ்களை அ.சா.ஆ 5 மற்றும் அ.சா.ஆ. 6 பெற்றார் என்றும், பின்னர் இவ்வழக்கின் இறுதி விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக 147, 148, 341, 294(பி), 324, 506(2) இதசவாக பதிந்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார் என்றும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார்.

14) இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

15) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றார்கள், எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**16) விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட சாட்சிகள் அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் தங்களது முதன்மை சாட்சியத்தில், வீட்டிற்க்குச் செல்வதற்காக கல்லூரி கேட் அருகே வந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தங்களை வழிமறித்து அசிங்கமாக திட்டியும், முதுகு மற்றும் தோள்பட்டையில் உருட்டு கட்டையால் அடித்தும், தனது உள்ளங்கையில் கத்தியால் வெட்டியும், கொலை மிரட்டல் விடுத்தனர் என்று கூறியுள்ளார்களே தவிர, எதிரிகள் தான்

ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, அசா1 மற்றும் அசா.2–ஐ வழிமறித்து, அசிங்கமாக திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று கூறவில்லை. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

## 17) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

**18)** இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**19)** இவ்வழக்கில் புகார்தாரர் / அ.சா.1 தான் கொடுத்த புகாரில், பத்தி 2ல் உள்ளவாறு சாட்சியமளிக்காமல், கடந்த 13.07.2016 ந் தேதி 01.20 மணியளவில் வீட்டிற்க்குச் செல்வதற்காக கல்லூரி கேட் அருகே வந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தன்னையும் தனது நண்பர் சுப்பரமணியையும் வழிமறித்து அசிங்கமாக திட்டியும், முதுகு மற்றும் தோள்பட்டையில் உருட்டு கட்டையால் அடித்தும், தனது உள்ளங்கையில் கத்தியால் வெட்டியும், கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், அடிபட்ட எங்களை செந்தில் மற்றும் மோகன் ஆகியோர் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும், போலீசார் விசாரிக்கும் போது புகார் வாக்குமூலம் அளித்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். அசா.2 தான் கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் சாட்சியமளிக்காமல் அதற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார்.

**20) அசா.1** எதிரிகளின் மீது கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மற்ற சாட்சிகள் யாரேனும் சாட்சியம் அளித்துள்ளார்களா என்று பார்க்கும்போது, காயம்பட்ட நபர் அசா.2 தனது முதன்மை சாட்சியத்தில் 13.07.2016ம் தேதி 12.00 மணியளவில் வீட்டிற்கு செல்வதற்காக கல்லூரி கேட் அருகே வந்தபோது அடையாளமட் தெரியாத நபர்கள் தன்னையும், தனது நண்பர் விநாயகமூர்த்தியையும் வழிமறித்து அசிங்கமாகதிட்டி, தாக்கி கொலைமிரட்டல் விடுத்தனர் என்றும், அடிப்பட்ட தங்களை செந்தில் மற்றும் மோகன்

ஆகியோர் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, புதுநகர் போலிசார் வந்து தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

21) **அசா.1** எதிரிகளின் மீது கொடுத்த புகாரினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மற்ற சாட்சிகள் யாரேனும் சாட்சியம் அளித்துள்ளார்களா என்று பார்க்கும்போது அரசு தரப்பில் யாரையும் விசாரிக்கவில்லை.

22) எனவே இவ்வழக்கின் எதிரிகள் தான் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, அசா1 மற்றும் அசா.2–ஐ வழிமறித்து, அசிங்கமாக திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அசா.1 மற்றும் அசா.2 சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அசா.3–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிகளை குற்றத்தோடு தொடர்புபடுத்த இயலாது. மேலும் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே இவ்வழக்கின் எதிரிகள் தான் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, அசா1 மற்றும் அசா.2–ஐ வழிமறித்து, அசிங்கமாக திட்டி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23) முடிவாக, இவ்வழக்கில் 1 முதல் 6 எதிரிகள் இதச பிரிவுகள் 1 முதல் 6 எதிரிகளிடம் இதச பிரிவுகள் 148, 341,294(பி), 324, மற்றும் 506(ii) கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

24) எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரங்கள் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

25) இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 29.04.2026 ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.04.29 06:05:16 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**

**கடலூர்.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. விநாயகமூர்த்தி

அசா.2 திரு.சுப்ரமணியன்

அசா.3 திரு.மோகனசிருஷ்ணன், சிறப்பு உதவி ஆய்வாளர்

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

அசாஆ.1 13.07.2016 அசா.2 னின் கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம்

அசாஆ.2 13.07.2016 முதல் தகவல் அறிக்கை

அசாஆ.3 13.07.2016 பார்வை மகசர்

அசா.ஆ.4 13.07.2016 மாதிரி வரைபடம்

அசாஆ.5 13.07.2016 அசா 1 னின் காயச்சான்றிதழ்

அசா.ஆ.6 13.07.2016 அசா2 னின் காயச்சான்றிதழ்

**அரசு தரப்பு சான்றுபொருள் –இல்லை**

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றுபொருள் – இல்லை**

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.04.29 06:05:22 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**

**கடலூர்.**

குறிப்பு

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**CC. No**.8/2017
**நாள்:29.04.2026**

**தீர்ப்புரை**

1 முதல் 6 எதிரிகள் ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டது. முடிவாக, இவ்வழக்கில் 1 முதல் 6 எதிரிகள் இதச பிரிவுகள் 148, 341,294(பி), 324, மற்றும் 506(ii) கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

நீதித்துறை நடுவர் எண்.2
கடலூர்.